**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, PONNERI**

| | |
|---|---|
| **Case No** | **: CC No.263/2025** |
| **Prosecution Witness** | **: LW 3 / PW 2** |

| | | | |
|---|---|---|---|
| Name | : Selvam | | : |
| Father / Husband Name | : Mani | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**( Both accused Present )**

**Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of 26/11/2025**

**முதல் விசாரணை ( அரசு தரப்பு )**

நான் தற்பொழுது எண். 13 லால்பகதுர் சாஸ்திரி 2 வது தெரு மீஞ்சூரில் வசித்து வருகிறேன். அ.சா1 எனது மனைவி ஆவார். எனது மனைவி ஆஜர் எதிரியான பர்வின் என்பவருக்கு ரூபாய் கொடுத்ததாகவும் அதை நாங்கள் கேட்க சென்ற போது சுரேஷ் என்பவர் மது போதையில் அவரது வீட்டின் அருகே மாலை 03.30 மணியளவில் தகாத வார்த்தைகளால் பேசினார். பின்பு எனது எனது மகளும் எனது மனைவியும் கேட்க சென்ற போது அவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டது. அதில் எனது மனைவி மற்றும் மகளின் செயினை அறுத்துவிட்டார்கள். அதில் பாதி நகை இல்லை. அதன் பேரில் நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் அளித்திருந்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பு)**

இவ்வழக்கின் புகார்தாரர் எனது மனைவி ஆவார். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை எனது மனைவி மற்றும் மகள் சொல்லி தான் எனக்கு தெரியும். எனது மனைவி ஆஜர் எதிரிகளிடம் பணம் பெற்றுள்ளார். அதை கேட்கும் சமயத்தில் உண்மையை மறைத்து எதிரிகள் மீது பொய்யான புகார் அளிக்கப்பட்டுள்ளது அதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அதை நான் மறுக்கிறேன்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, PONNERI**

**Case No : CC No.263/2025**
**Prosecution Witness : LW 1 / PW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : Mohana | | : |
| Father / Husband Name | : Selvam | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**( Both accused Present )**

**<u>Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of 26/11/2025</u>**

**<u>முதல் விசாரணை ( அரசு தரப்பு )</u>**

நான் தற்பொழுது எண். 13 லால்பகதுர் சாஸ்திரி 2 வது தெரு மீஞ்சூரில் வசித்து வருகிறேன். எனது தெருவில் வசிக்கும் சுரேஷ் மற்றும் பர்வின் என்பவர்களுக்கு 1,50,000 ரூ. கடனாக கொடுத்தேன். அதில் ரூ. 30,000 மட்டும் திருப்பிக் கொடுத்தார்கள். மீதம் உள்ள ரூ. 1,20,000 கேட்டதற்கு 28.06.2024 அன்று மதியம் 03.30 மணியளவில் சுரேஷ் என்பவர் எனது வீட்டிற்கு வந்து தனது துணியை தூக்கி காண்பித்து அசிங்கமான வார்த்தைகளால் என்னையும் எனது மகளையும் பேசி உனது மகளுக்கு பிள்ளை கொடுப்பேன் என்றும் தகாத வார்த்தைகளால் பேசினார். பின்பு நானும் எனது மகள் தேவியும் அவர்களது வீட்டின் அருகே கேட்டபோது அவர்கள் என்னையும் எனது மகளையும் அடித்து எங்களது செயினை அறுத்தார்கள். அதன் பேரில் நான் அன்றைய தினமே மீஞ்சூர் காவல் நிலையம் சென்று எழுத்து மூலமான புகார் ஒன்று அளித்திருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நாங்கள் அளித்த புகார் தான். அந்த புகார் **அ.தசா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் அளித்த புகாரின் பேரில் முதலில் விசாரிக்கவில்லை பின்னர் ஆவடி காவல் நிலையத்திற்கு சென்று பின்பு தான் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பு)**

எனக்கு எழுத தெரியாது. புகாரை யார் எழுதினார்கள் என்று தற்போது நியாபகமில்லை. புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் நான் பணம் கொடுத்த விவரத்தை பற்றி தான் உள்ளது. புகார் 10 நாட்கள் காலதாமதமாகதான் அளிக்கப்பட்டது என்றால் முதலில் மீஞ்சூர் காவல் நிலையத்தில் புகாரை ஏற்கவில்லை. பணம் அளித்ததற்கான ஆவணம் எதுவும் இல்லை என்றால் நம்பிக்கையின் பேரில் வாங்கவில்லை. பணம் எதுவும் கொடுக்கவில்லை நான் தான் எதிரிகளிடமிருந்து பணம் பெற்றுள்ளேன் அதை கேட்டும் பொருட்டு அதை மறைத்து எதிரிகள் மீது பொய்யான புகார் ஒன்றை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதை நான் மறுக்கிறேன். சம்பவம் உண்மை என்னும் பட்சத்தில் அருகில் உள்ள மீஞ்சூர் காவல் நிலையத்திற்கு முறையான புகார் அளித்திருந்தும் எதிரிகளை பழிவாங்கும் நோக்குடன் தாக்கல் செய்த புகாரின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அதை நான் மறுக்கிறேன். சம்பவம் உண்மை என்னும் பட்சத்தில் நான் மருத்துவமனைக்கு சென்று அதற்கான ஆவணம் எதுவும் நான் பெற்றிருப்பேன் என்றால் அதை நான் மறுக்கிறேன் மருத்துவமனைக்கு சென்றேன்.